தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - **641 003**

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: **94890 56730**

தொலைபேசி: **0422 - 6611302**
நிகரி: **0422 - 2431821**
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: **3-12-2015**

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண் பல்கலையில் பள்ளி மாணவர்களுக்கான மண் வளம் குறித்த ஒரு நாள் கருத்தரங்கு

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் மண்ணியல் மற்றும் வேளாண் வேதியியல் துறை மற்றும் நாட்டு நலப்பணித் திட்டம் இணைந்து பள்ளி மாணவர்களுக்கு மண் வளம் குறித்து மாவட்ட அளவிலான ஒருநாள் கருத்தரங்கு இன்று **(3-12-2015 )** பல்கலைக்கழக பொன்விழா அரங்கில் நிகழ்ந்தது. ஏழு முதல் ஒன்பதாம் வகுப்பு வரை படிக்கும் அரசுப் பள்ளிகளிலிருந்து **110** மாணவர்களும் **9** ஆசிரியர்களும் பங்கு பெற்றனர்.

ஐக்கிய நாடுகள் சபை **2015**ம் ஆண்டை சர்வதேச மண்வள ஆண்டாக அறிவித்துள்ளது. இதனையொட்டி பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. நிகழ்ச்சியில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக மண்ணியல் துறை பேராசிரியர் முனைவர் அ. வடிவேல் அவர்கள் மண்வளம் குறித்து விளக்கியதோடு நீர் ஊடுருவும் தன்மை, சுண்ணாம்புத் தன்மை, மண் நிறம், நயம் குறித்து செயல்முறை பயிற்சி அளித்தார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக மண்ணியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் மு.ரா. லதா அவர்கள் மற்றும் உதவிப் பேராசிரியர் முனைவர். ம. கோபாலகிருஷ்ணன் “மண் வளமே மனித வளம்” என்ற தலைப்பில் பேச்சுப் போட்டி மற்றும் ஓவியப் போட்டிகள் நிகழ்த்தினர்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக நுண்ணுயிரியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் கே.ஜி. அனிதா அவர்கள், மண் வளத்தில் நுண்ணுயிர்களின் பங்கு என்பது குறித்து உரையாற்றினார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக இயற்கை வேளாண்மை இயக்கக தனி அலுவலர் முனைவர் வ.பெ. துரைசாமி அவர்கள் தனது சிறப்புரையில் மனித உடலின் செயல்பாடுகள் போலவே மண்ணின் செயல்பாடுகள் உள்ளன. மண்ணின் ஊட்டச்சத்து பற்றாக்குறை ஊட்டச்சத்தில்லா மனித வளங்களை உருவாக்குகின்றது.

மண்ணே வேளாண்மைக்கு உயிர்நாடி. மண்ணில் உள்ள கரிமச்சத்து மேம்படுத்தப்பட்டால் பயிர் வளர்ச்சி சிறப்பாகி மகசூல் பெருகும் என்றார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக வேளாண் முதன்மையர் ச. மகிமைராஜா அவர்கள் விழா தலைமையுரையில் மண் மாசுபடுவதால் வேளாண்மை மிகவும் பாதிக்கப்படுகிறது. மண் வளமே நாட்டின் மிகப் பெரும் சொத்து என்று எடுத்துரைத்தார். வேற்று கிரகத்தில் கூட மண் உள்ளதா என்றுதான் முதலில் ஆய்வு செய்கின்றனர். இக்கருத்தரங்கு மூலம் வருங்காலத் தூண்களாகிய பள்ளி மாணவர்களுக்கு மண் குறித்த விழிப்புணர்வு ஏற்பட்டு அவர்கள் மண்ணைப் பாதுகாப்பதில் பங்களிக்கச் செய்ய எண்ணம் விதைக்கப்பட்டது என்றும் கூறினார். தொடர்ந்து பங்கேற்பு சான்றிதழ்களும், பரிசுகளும் வழங்கினார்.

முன்னதாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக மண்ணியல் துறைத்தலைவர் முனைவர் வெ.வே. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் வரவேற்புரையும் நாட்டு நலப்பணித் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் க. குமுதா அவர்கள் நன்றியுரையும் வழங்கினர்.

விழாவில் மண்ணியல் துறை விஞ்ஞானிகள் மற்றும் நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர்கள் ஆகியோர் பங்கேற்றனர்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்




2015
INTERNATIONAL YEAR OF SOILS
TAMIL NADU AGRICULTURAL UNIVERSITY
AC & RI, COIMBATORE &
OF SOIL SCIENCE and AGRL.CHEMISTRY
DISTRICT
VEL SEM
AR ON
L HEALTH
R SCHO
CHILDREN
E : GOLDEN JUB
DATE : 03.12.2015